**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**
Case No.CC.15/2023
Prosecution witness.04

| | |
|---|---|
| பெயர் : டாக்டர்.திரு.சந்திரமோகன் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of July 2023.

21.07.2023

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது பரமக்குடி அரசு மருத்துவமனையில் மூத்த அரசு உதவிமருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.08.2022ம் தேதி நான் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது கீழத்தூவல் காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின்படி இவ்வழக்கில் விபத்தில் அடிபட்டு இறந்துபோன சுமார் 42 வயது மதிக்கத்தக்க மணிமாறன், த.பெ.முத்தையா என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்தேன்.

2) மணிமாறன் பிரேதத்தை பரிசோதித்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

**வெளிப்புற காயங்கள்:**

(i) இடது தொடையில் 5x4cm அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது.

(ii) வலது நெஞ்சு முழுவதுமாக சிதைந்து காணப்பட்டது, வலது நெஞ்சில் வாகன சக்கரத்தின் அடையாளம் பதிந்து காணப்பட்டது.

(iii) இடதுபக்க கீழ் இடுப்பில் விதைப்பைக்கு மேல் 5x4x2cm அளவில் சிதைந்த காயமும் மற்றும் ஆண்குறியின் அடிபாகத்தில் 3x2cm அளவில் சிராய்ப்பு காயமும் காணப்பட்டது.

(iv) இடது கால் முழங்காலுக்கு கீழ் 10x8, 8x5 மற்றும் 4x3cm அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

(v) இடது தொடையில் 10x8cm அளவில் சிராய்ப்புடன் கூடிய வீக்க காயம் காணப்பட்டது.

(vi) இடதுபக்க வயிற்றில் 2x2cm அளவில் சிறிய சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

**<u>உள்புறக்காயங்கள்:</u>**

(i) வலதுபக்க காரைஎலும்பு உடைந்து காணப்பட்டது.

(ii) வலது நெஞ்சு முழுவதும் சிதைந்து அனைத்து விலா எலும்புகளும் உடைந்தும், நடு நெஞ்சுப்பகுதி எலும்பிலிருந்து பிரிந்து இருந்தது.

(iii) வலது நுரையீரல் முழுவதும் சிதைந்து ரத்தமாக காணப்பட்டது.

(iv) இடது நுரையீரல் சிதைந்து காணப்பட்டது.

(v) இருதயத்தில் அனைத்து பெரிய ரத்தக்குழாய்களும் சிதைந்து காணப்பட்டது.

(vi) இடது தொடை எலும்பு உடைந்து காணப்பட்டது.

(vii) கபாலத்தில் எந்த காயங்களும் காணப்படவில்லை.

3) இறந்த நபர் மேற்படி பல எலும்புகள் உடைந்து உறுப்புகள் சிதைந்து இருந்ததால் ஏற்பட்ட ரத்த இழப்பினாலும் அதிர்ச்சியினாலும் இறந்துள்ளார். **(பிரேத விசாரணை சான்று அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.